


வற்றாத வளமையும், குன்றாத [illegible] நுமையும் கொண்ட தமிழ் ஆய்வின் நுட்பங்களை உலகம் முழுவதும் உள்ள சிறப் படைப்புகளுடன் ஒப்பிட்டும், வருங்கால மனிதகுலத்திற்குத் தமிழ் ஆய்வுகள் கூறும் செய்திகளைப் பரிமாறவும் இக்கருத்தரங்கம் உறுதுணையாக அமைய வேண்டும்.

அருட்தந்தை முனைவர் டி.அந்தோணிராஜ், ச.ச.,




ஆராய்ச்சி என்பது ஒரு நாகரிக சமூகம் வளர்கிறது என்பதற்கான அடையாளம். கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இவ்வாறான ஆராய்ச்சிச் செயல்பாடுகளை முன்னெடுப்பனவாகவும் முன்னுரிமை கொடுத்துத் தலைமைதாங்கி நடத்திச் செல்வனவாகவும் இருக்க வேண்டும்.

அருட்தந்தை முனைவர் தா.மரிய அந்தோணிராஜ், ச.ச.,



தற்காலத்தில் வெளிவருகின்ற பெரும்பாலான ஆய்வுகள் நலம் பாராட்டுபவையாகவும், உரை விளக்கம் அளிப்பவையாக அமைந்திருக்கின்றன. சமூகத்திற்குப் புது வெளிச்சம் பாய்ச்சக்கூடிய ஆய்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளி வருவது சற்று ஆறுதலை அளித்து வருகின்றன.

முனைவர் பொன்.செல்வக்குமார்



தமிழியல் ஆய்வுக்களத்திற்கு வரும் இளம் ஆய்வாளர்களில் பல நம்பிக்கை நட்சத்திரங்கள் இருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அவர்கள், கல்விப்புலம் சார்ந்த இந்தக் கருத்தரங்கத் திருவிழாக்களில் காணாமல் போன குழந்தைகள். அவர்கள் காணாமல் போனது யாருக்குமே தெரியாது. தெரிந்தால் அல்லவா தேட?

முனைவர் கி.பார்த்திபராஜா

Rs. 600

ISBN 93-80490-36-3

போதி வனம்

# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்


கு. கார்த்திகா

ஆ. ரூபா

ம. வித்யா


# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)


பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா

| | | |
|---|---|---|
| 66. சுகன்யா.ம | சங்க நெய்தல் திணைப்பாடல்களில் தலைவியின் உணர்வுப்போராட்டம் | 415 |
| 67. சுமதி.து | தமிழியல் ஆய்வில் மயிலை. சீனி.வேங்கடசாமி | 419 |
| 68. சுரேஷ்பாபு.சு | அகநானூற்றில் விழாக்கள் | 426 |
| 69. சுஜா.ச.அ | கைலாசபதியின் பார்வையில் மகாகவி | 430 |
| 70. செந்தமிழ் செழியன்.சு | திலகவதி கூறும் கற்புக் கோட்பாடு குறித்த எதார்த்தவாதம் | 435 |
| 71. செல்வசுப்பிரமணியன்.வெ | தமிழ்ப் பெண் கவிஞர்களின் சமுதாயப் பார்வை | 439 |
| 72. சோழன்.ந | பௌராவின் வீரநிலைக் கோட்பாடு நோக்கில் தமிழ்ப் புராணக் கதைப்பாடல்களில் உருமாறல் | 446 |
| 73. ஞானமூர்த்தி.சி | தந்தை பெரியாரின் மொழியியல் சிந்தனை | 451 |
| 74. தமிழரசி.கீ.சு | சங்க அகஇலக்கியங்களில் வாடைக்காற்று - ஓர் ஆய்வு | 455 |
| 75. தரணி.த | கணேசையரின் தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்புரையின் சிறப்புகள் | 460 |
| 76. திலிப் ஏங்கல்ஸ்.அ | புறநானூற்றில் தும்பைத் திணை | 471 |
| 77. துர்க்காதேவி.பொ | இலக்கியக் கலையில் முன்னக் கோட்பாடு | 476 |
| 78. துரைப்பாண்டியன்.அ | மறுபக்கம் நாவலில் சாதிச்சிக்கல்கள் | 482 |
| 79. துளசி.ம | புறநானூற்றில் இசைக்கருவிகள் | 489 |
| 80. நளினி.இரா | நச்செள்ளையாரின் பெண்மையச் சிந்தனைகள் | 494 |
| 81. நாகபுஷ்பம்.கோ | திருக்குறளில் வேளாண்மை | 499 |
| 82. நாகேந்திரன்.கி | சிலப்பதிகாரத்தில் சமயக் கோட்பாடு | 505 |
| 83. நெல்லையப்பன்.தி | இலக்கண நூல்களின் ஆய்வுப் போக்குகள் | 512 |
| 84. பசுபதி.த | சங்கப் புலவரின் ஆளுமைத்திறன் | 515 |
| 85. பமிலா.இரா | தொல்குடி மக்களின் பண்பாடும் இன்றைய நிலையும் | 521 |
| 86. பரிமளா | மு.வ.வின் பார்வையில் தமிழ் இலக்கிய ஆய்வு | 525 |
| 87. பரிமளாதேவி.ம | திணைக் கோட்பாடும் தமிழ் நாவலும் | 530 |
| 88. பழனி.ப | அறிஞர் அண்ணாவின் தமிழ்க்கொடை | 535 |
| 89. பழனிக்குமார்.க.சி | அடித்தளமக்கள் பண்பாட்டில் சாதி (இமையத்தின் புனைகதைகளை முன்வைத்து) | 539 |
| 90. பாண்டியம்மாள்.க | தத்துவ நோக்கில் வீர சைவம் | 545 |
| 91. பாப்பா.மா | கோவேறுகழுதை நாவலில் வண்ணார் சமூகம் | 549 |
| 92. பார்த்திபராஜா.கி | எழுத்தாளர் ஞானியின் செவ்வியல் இலக்கிய ஆய்வு | 554 |
| 93. பாரதி.ம | தமிழ் இலக்கிய ஆய்வில் தேவநேயப்பாவாணர் | 561 |
| 94. பாரி.ஞா | தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் | 568 |

அனைத்துப் பொருள்களிலும் இறைவன் இருப்பையும், தெய்வீக அமைதியையும் காண்கிறான். காரண உடல் நீங்கி ஞான உடலை அடைகிறான். இந்த நிலையில் அங்கமும், லிங்கமும் ஒன்றுபடுவதால் யோகாங்கி எனப்படுவான். யோகாங்கியின் வழிபடு கடவுள் பாவ லிங்கம் ஆகும்.

மூவகை லிங்கங்கள் : அன்றாட சம்பவங்களிலும், உண்மை நடப்புகளிலும் ஆளுகை செய்யும் தனியான தெய்வ நிலை இஷ்டலிங்கம் சாத்தியக் கூறுகளில் ஆளுகை செய்யும் பிரபஞ்சக் கடவுள் பிராணலிங்கம் ஆகும். தன்னிடம் உண்மை காணும் எல்லையற்ற பரம்பொருள் பாவலிங்கம்.

மூவகை லிங்கங்கள் ஒவ்வொன்றும் இரண்டாக மாறும். இஷ்டலிங்கம் ஆகாரலிங்கம் (நடைமுறை - Practical) என்றும், குரு லிங்கம் (உபதேசம் - Preceptive) என்றும் மாற்றம் கொள்கிறது. பிராணலிங்கம் சிவலிங்கம் (புனிதம் - Auspicious) என்றும் சரலிங்கம் (இயக்கம் - Dynamic) என்றும் மாறுகிறது. பாவலிங்கம் பிரசாதலிங்கம் (நளினம் - Gracious) என்றும் மகாலிங்கம் (பெருமை - Great) என்றும் மாற்றம் பெறுகிறது.

தியாகாங்கி: தியாகாங்கி ஆசாரலிங்கத்திடம் உள்ள பக்தி சிரத்தையினால் பக்தனாக மாறும் பொழுது அது பக்த - ஸ்தலம் ஆகும். குருலிங்கத்திடம் நிஷ்ட பக்தி (Disciplined Devotion) காட்டி மகேசனாக மாறும் பொழுது மகேசஸ்தலம் ஆகும்.

போகாங்கி: போகாங்கி சிவலிங்கத்திடம் உள்ள சிதறாத பக்தி யினால் (அவதானபக்தி) பிரசாதின் ஆகும் பொழுது பிரசாதி - ஸ்தலம் ஆகும். சரலிங்கத்திடம் அருளனபவத்தால் (அனுபவ சக்தி) பிராண லிங்கமாக மாறும் பொழுது அது பிராண லிங்க ஸ்தலம் ஆகும்.

யோகாங்கி: யோகாங்கி பிரசாத லிங்கத்தைத் தியானித்து ஆனந்த நிலை (ஆனந்த பக்தி) சரணன் ஆகும் பொழுது அது சரண ஸ்தலம் ஆகும். மாகலிங்கத்திடம் ஒன்றி ஐக்யம் ஆகும் பொழுது (சமரச பக்தி) அது ஐக்ய - ஸ்தலம் ஆகும்.

இதுவே ஸத் - ஸ்தலத்தின் உள்ளீடாகும். வீர சைவமும் முப்பத்தாறு தத்துவங்களைப் பற்றிக் கூறுகிறது.



# கோவேறுகழுதை நாவலில் வண்ணார் சமூகம்

**முனைவர் மா. பாப்பா,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி,
மதுரை.

வாழ்வின் ஒவ்வொரு பரிமாணங்களையும் விளக்கி நிற்கும் நாவல்கள் தன் கதையோட்டத்தின் வழியாக வாழ்வின் நிகழ்வு களையும், நிலையையும் பதிவு செய்கிறது. இச்சமூகத்தில் மனிதனுக்கு மனிதன் ஒடுக்கப்படுகின்ற நிலை பல ஆண்டுகளாக தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று ஔவையாரும், சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாரதியும் முழக்கமிட்டாலும் சாதி ஒழிந்தபாடில்லை.

தமிழ் மக்களை இழிவாகப் பார்க்கும் மரபான மனப்பதிவைக் கலைத்து, தலித் மக்களின் மனிதப் பண்புகளை, வேதனைக் குரல் களை எழுத்தில் வார்க்கத் தொடங்கியது தலித் இலக்கியம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டுவரும் தலித் மக்களின் வாழ் வினை தடம் பதித்துக் காட்டியவர் ஆசிரியர் இமயம். இவரின் படைப்பாகிய 'கோவேறுகழுதை' என்ற நாவல் இக்கட்டுரை அமைப்பதற்குத் தூண்டு கோலாக அமைகிறது.

தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கப்பட்ட வண்ணார் சமூக மக்களின் அவலங்கள், வேதனைகள் ஆகியவற்றை ஆசிரியர் இமயம் தடம் பதித்துக் காட்டுகிறார்.

## தொழில்

வண்ணார் என்பதால் இவர்களின் தொழில் ஊரில் உள்ளவர்களின் அழுக்குத்துணி துவைப்பது, ஊர்ச்சோறு எடுப்பது. இது தான் இவர்களின் பரம்பரைத் தொழில். இதுமட்டுமின்றி ஊரில் யாரேனும் இறந்துவிட்டால், ஈமச்சடங்கு அனைத்தையும் இவர்கள்தான் செய்வார்கள். ஆனால், ஊர்மக்கள் இவர்களை ஒரு மனிதர்களாகக் கூட மதிக்காமல் வேலையை அதிகமாக வாங்கிவிட்டு ஊதியம் தர மறுக்கின்றார்கள். இதனைக் கேட்டால் உடனே "பொட்டச்சி நீ பேசாதே" என்று ஆரோக்கியத்தின் வாயை அடைத்து விடுகிறார்கள். இதனால் மனவேதனை அடைகின்றார்கள் அம்மக்கள் என்பதை இந்நாவல் வழி அறியமுடிகிறது.